முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1039

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.08.2022, புதன்கிழமை

1. ஓங்கார தவசியே அரங்கா வாழ்க
ஓங்கார ஞானியே தேசிகா வாழ்க
ஓங்காரக்குடில் படைத்த அரசனே வாழ்க
ஓங்காரன் என் சூட்சுமமே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 18 நாள், 03.08.2022 புதன்கிழமை)
ஊழ் போக்கும் கலியின் மகா சக்தி நீ
உலகோர்க்கு ஞானம் தரும் மாதவசி நீ
3. தவசி உன் தர்மவழிகள் தனை
தரணியோர் ஏற்று வந்தாலே
அவனியில் அவரவர்க்கு ஞான சித்தி
அரங்கன் உன் தவமாக ஆறுமுகன் என்னருளால் வாய்க்க நேரும்
4. வாய்க்கவே ஓங்காரக்குடில் நோக்கி
வையகத்தார் வருகை கூடவே
ஓங்கார ஞான உலகம் சடுதி
உயர்வாக ஆறுமுகன் என் தயவால் நடந்தேறும்
5. கருணைகொண்டு அரங்கன் கொள்கைகளை
கட்டளையாக ஏற்று மக்களெல்லாம்
பெருமைபட உலகமெங்கும் பரப்பி வர
பேருலகம் ஞான பலம் பெற்று
6. இனிதே தர்ம ஞான லோகமாகவும் பிசகில்லா ஞான யுகமாற்றமாகவும் அடையக்கூடும்
கூடவே அரங்கனுக்குள்ளே குருபரன் யான் மகா சக்தியாய் ஈடேற்றம் தொடர்ந்து செய்துவர
தடையற அரங்கன் தொடர்பில் இருந்தால் போதுமப்பா
தரணியோர்க்கு சித்திகள் உறுதியாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–